# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**பாதுகாப்பு அமைச்சு**

## இலங்கை இராணுவம்

## இலங்கை இராணுவத்தின் ஏனைய பதவிநிலையினரின் பாவனைக்காக ஜொகிங்/விளையாட்டு சப்பாத்துகளுக்கான பெறுகை - 167,000 சோடிகள்

**ஒப்பந்த அடையாள இலக்கம்: MOD/SLA/01/2021**

1. இலங்கை இராணுவத்திற்கு ஏனைய பதவிநிலையினருக்கான 167,000 சோடிகள் ஜொகிங்/விளையாட்டு சப்பாத்துகளைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை இராணுவத்தின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு (SCAPC) தலைவர் அழைக்கின்றார்.

2. விலைக்கோரல் செயற்பாடுகள் சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் (ICB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உள்ளாகாதவராகவும் மற்றும் கடந்த இரண்டு (2) வருடங்களில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மூலம் நிரூபிக்கக்கூடிய ஆகக் குறைந்தது 300 மில்லியன் ரூபாவுக்கான வருட புரள்வைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் விலைமனுதாரர்கள் கடந்த மூன்று (3) வருடங்களில் அரசாங்க அல்லது ஏனைய அமைப்புகளுக்கு 50,000 சோடிகள் ஜொகிங் / விளையாட்டு சப்பாத்துக்களை வழங்கிய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் முதன்மை பொதுக் கட்டளை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொ.பே. 011-2432135, மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com மற்றும் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் (இலவசமாக) பரீட்சித்துப் பார்க்கலாம்.

   தலைவர்,
   அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,
   பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,
   ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை.
   தொ.பே. 011-2390719
   தொலைநகல்: 011-2390720
   2021–08-09ஆம் திகதி முதல் 2021-08-30ஆம் திகதி வரையான சகல வேலை நாட்களிலும் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை.

5. இயைபானால், விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரமான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   பிரதான நிதியியல் அதிகாரி (I),
   பெறுகைக் கிளை,
   பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,
   ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை.
   மின்னஞ்சல்: procurement@defence.lk
   மற்றும்

   பாதுகாப்பு அமைச்சுக்கு மீளளிக்கப்படும் கட்டணமாக 65,000.00 இல. ரூபாவை (ஒரு இலட்சம் இலங்கை ரூபாய்கள்) ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

7. விலைமனுக்கள் 2021-12-29ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

8. மேலேயுள்ளவற்றிக்குப் புறம்பாக, விலைமனுக்கள் திறக்கப்படும் நாளில் பரீட்சித்துப் பார்ப்பதற்காக 10 சோடிகள் ஜொகிங்/விளையாட்டு சப்பாத்துகளை விலைமனுதாரர்கள் முற்படுத்துதல் வேண்டும்.

9. விலைமனுக்களை MOD/SLA/01/2021 எனும் குறிப்பீட்டிலக்கத்தைக் குறித்து பின்வரும் முகவரிக்கு 2021-08-31ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

   பிரதான நிதியியல் அதிகாரி (I),
   பெறுகைக் கிளை,
   பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,
   ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை.

   பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விருப்பத்தின் பேரில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

10. பின்வரும் முகவரியில் 2021-08-17ஆம் திகதி 1030 மணித்தியாலயத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

    இராணுவ சிலிங்கோ கட்டிடம்,
    இல. 167/30, அவிசாவளை வீதி, ஒருகொடவத்தை.

11. சகல விலைமனுக்களுடனும் ITBயின் 20ஆம் பிரிவின் பிரகாரம் அறுபது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நூறு ரூபாவுக்கான (6,062,100.00 இல. ரூபா) விலைக்கோரல் உத்தரவாதமொன்று (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற, கோரிக்கை மீதான விலைக்கோரல் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்) விலைக்கோரல் உத்தரவாதமானது 2022-01-28ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

12. தொடர்பு விபரங்கள்

    இலங்கை இராணுவ முதன்மை பொதுக் கட்டளைப் பிரிவு,
    தொலைபேசி: 011-2432135
    தொலைநகல்: 011-2432135
    மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com

    பிரதான நிதியியல் அதிகாரி (I),
    பெறுகைக் கிளை,
    பாதுகாப்பு அமைச்சு,
    பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,
    ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை.
    தொலைபேசி: 0094-11- 0094-11-2390719
    தொலைநகல்: 0094-11-2390720

13. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக்குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக, விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்குபெறும் தனிநபரின் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியியல் அதிகாரி (I) அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

14. சித்திகரமான விலைமனுதாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கான நோக்கத்தின் பேரில் விலைமனுதாரர் வரிசை அமைச்சிற்கு, செயலாளரால் அறிவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் சகல பெறுகை மேன்முறையீடுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மேன்முறையீடுகளும் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**பெறுகை மேன்முறையீட்டுச் சபை,**
**ஜனாதிபதி செயலகம்,**
**கொழும்பு 01, இலங்கை.**

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, இலங்கை.**